# மாதர் மனோரஞ்சனி.

(எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.)

| VOL. 2. | MADRAS: APRIL 1900. | No. 2. |
|---|---|---|
| புந்த. ௨. | சென்னை, 1900-ஞு ஏப்ரில்-மீ. | இல. ௨. |


## மாயாபுரி விநோதக்கதை.

(முன்தொடர்ச்சி.)

நான் தங்களுக்குத் தெரியாமற் செய்துவிட்டதற்காக மன்னிக்கவேண்டுகிறேன். அம்மாளிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது எனக்குண்டான பேரானந்தத்தினால் அம்மாளைவிட்டுப் பிரிந்திருக்க மனமில்லாமல் என்னை மறந்து ஏற்பாடு செய்துவிட்டேன் என்றாள். பிள்ளையவர்கள் பெண்ணே வெகு சந்தோஷம் நீசெய்த ஏற்பாடே நல்லது. இதனால் எனக்கு மிக்க மகிழ்ச்சியுண்டாகியது என்று சொல்லி, உடனே சில பேரையனுப்பி யந்தவீட்டைச் சீர்படுத்திக் காலமே குடியேறுவதற்கான ஏற்பாடு செய்துவிட்டு, ஐயரவர்களுக்குப் படுக்கையறை கொடுத்துப் படுக்கச்சொல்லித் தாம் தமது மனைவி மக்களோடு படுத்துக்கொண்டு நித்திரை பிடியாமல் ஐயரவர்களைக் கிராமத்துக்குள்ளழைத்துப்போய்க் குடிவைப்பதைப்பற்றி மனைவியாரோடு பேசிக்கொண்டு, எப்பொழுது விடியுமென்று சூரியோதயத்துக்கெதிர் பார்த்துக்கொண்டிருந்தார்.

கோழி கூவியது. காகங்கள் கரைந்தன. பட்சிகள் பாடின. தாமரைத் தடாகங்களில் வண்டுகள் ரீங்காரஞ் செய்துகொண்டு தேனுண்டு களிக்கும்படி தாமரைகள் மலர்ந்தன. மரங்கள்தோறுந் தங்கத்தை யுருக்கிவார்த்தாற்போலச் சூரிய கிரணங்கள் வீழ்ந்தன. நதிக்கரையில் ஸ்நானஞ்செய்கிற பிராமணர்களுடைய வேதகோஷங் காதிற்பட்டன. உடனே அருணாசலம் பிள்ளையவர்கள் மனைவியைக் கூவிக்குழந்தைகளையழைத்துக்கொண்டு வீட்டுக்குப்போய்ச்சேரு. போகும்பொழுது அம்மாளையுங்கூட அழைத்துக்கொண்டுபோய் எதிர்த்த வீட்டிலிருக்கச்செய்து, யாதொரு குறைவும் வாராமற் சகல சாமக்கிரியைகளும் கொடுத்து அடிசிலாக்கச்செய். நான் சுவாமி அவர்களை யழைத்துக்கொண்டு வருகிறேனென்று ஐயரவர்கள் படுத்திருக்கும் அறைக்குச் சமீபத்தில் வந்து நின்றார். அப்பொழுது விஜயலட்சுமி அம்மாள் குழந்தையைப்பார்த்துஅப்பா ஸ்நானஞ்செய்யப்போய்

இரண்டு நாழிகையாய் விட்டது. இதோ வந்துவிடுவாரென்று கூறக்கேட்ட பிள்ளையவர்கள் மஹாலட்சுமிக்கு ஜாடைகாட்ட அவள்வந்து அம்மா வாருங்கள்; நாம் வீடுபோய்ச் சேருவோம். சுவாமியவர்கள் காலைக்கடனை முடித்துக்கொண்டு வருவார்களென்று கூற அப்படியே விஜயலட்சுமி அம்மாள் குழந்தையை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். நால்வரும் மனமகிழ்ச்சியோடு பேசிக்கொண்டு வீட்டுக்குப்போனவுடன், அவர்களுக்காகத் தயார் செய்யப்பட்டிருக்கும் வீட்டில் விஜயலட்சுமி அம்மாளையிட்டுக் கொண்டுபோய் விட்டு, அம்மா இது தாங்கள் வசிக்கத்தகுதியான இடந்தானே பாருங்களென்ன, விஜயலட்சுமி அம்மாள், இராஜ அரண்மனை போலிருக்கிறது. இதைவிடச் சிறந்தது வேறுண்டென நானினைக்கவில்லை என்று மகிழ்ச்சியோடுகூற, மஹாலட்சுமி, அம்மா தாங்கள் என்னுயுள் பரியந்தமிந்தவீட்டிலேயே யிருந்துகொண்டு, எங்களுக்குத் தகுந்த புத்திமதிகளைக்கூறிப் பரிபாலிக்க பிரார்த்திக்கிறேனென்றுசொன்னாள். விஜயலட்சுமி அம்மாள், மஹாலட்சுமீ எனக்கேனிந்த வுபசாரவசனங்கள்? உங்களுடைய பேராதரவிலிருந்து கொண்டே ஜீவகாலத்தைக் கழிக்கும்படி தேவன் கட்டளையிட்டிருக்கிறபடியால் நான் போக விடமுண்டோ வென்றாள். இப்படியிருக்கையில் அருணாசலம் பிள்ளையவர்கள் ஐயரவர்களை யழைத்துக்கொண்டுவந்து உள்ளே பிரவேசித்துச் சுவாமி யிந்தச் சிறுகுடிவில் தங்கி, என்நாளுமென்னைவிட்டு நீங்காமல் வசிக்கவேண்டுகிறேன். என்னை வேறாகப் பாவியாமல் என்னையும் என்னுடைய சொத்துக்கள் யாவற்றையுந் தங்களுடையதாக சுதந்தரித்துக்கொண்டு பரிபாலித்தருளும் சுவாமீயென்று பணிந்து, மனைவியைப்பார்த்துச் சுவாமியவர்களுக்குப் போஜனந்தயாராகட்டும். நீ வீடுபோய் நமக்கு வேண்டியவற்றைச்செய்; யாவரும் உண்டபிறகு வருவோமென்றழைத்துக்கொண்டு வீடுபோனார்.

சிவசுவாமி ஐயர் மனைவியைப் பார்த்துப் பெண்ணே! ஆண்டவன் கருணையைப் பாரத்தாயா! இருக்கட்டும்; வைதிககருமங்களுக்குந், தேவாராதனைக்குந் தயார்செய்; என்று கூறிச் செபஞ்செய்யப்போயுட்கார்ந்தார். விஜயலட்சுமி அம்மாள் குளித்துச் சுத்த வஸ்திரந் தரித்துக்கொண்டு, சமையல் செய்ய ஆரம்பித்துச்சிறிது நேரங்கழித்து நாயகரிடம் வந்து, சுவாமியெல்லாந்தயாராயிற்றென்று கூறினள். ஐயரவர்களெழுந்து தேவபூஜைகளையும், வைதிககிருத்தியங்களையுமுடித்துக்கொண்டு, போஜனமுண்டபின் மனைவியையுண்ணும்படி சொல்ல, அம்மாளுமுண்டு, குழந்தைக்கு மன்னமூட்டித்தாம்பூலமெடுத்துக்கொண்டுவந்து, நாயகன் பக்கத்தில் வந்துட்கார்ந்தாள். பிள்ளை யவர்களுக்கும், மஹாலட்சுமிக்கும் வேறு பேச்சில்லாமலிதையே பேசிக்கொண்டு சீக்கிரம் போஜனாதிகளை முடித்துக்கொண்டு, ஐயரவர்

களைப் பார்க்க வந்தார். அடிச்சத்தங் கேட்ட ஐயரவர்கள் வாருங்களெ ன்ன உள்ளே வந்து பணிவோடு மொருபுறத்திலுட்சார்ந்தார். ஐயர், பிள்ளையவர்களே நேற்று எனது வரலாறு கேட்டீர்களே. இன்று சொல்வதாகச் சொன்னேனன்றோ! ஆகையால் தமது மனைவி முதலானவர்களும் வரட்டுமென்று வாய் மூடுவதற்குள் மஹாலட்சுமி, ஞானம்பாளையும். நாத்தனூர் வனவல்லியையுமழைத்துக் கொண்டுள்ளே புகுந்து நாயகனுத்தரவின்பேரில் பக்கத்திலுட்கார்ந்தாள். யாவரும் தாம்பூலந்தரித்துச் சிறிது நேரம் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்த பின்பு, ஐயரவர்கள் பிள்ளையவர்களே! என் வரலாறு சொல்கிறேன். அது மிகவும் விசேஷமானது; கவனமாய்க் கேளுமென யாவரும் களிப்புற்று மஹாபாக்கியமென்ன ஐயரவர்கள் சொல்ல வாரம்பித்தார்.

சாவதானமாய்க் கேளுங்கள். நாங்கள் பூர்வமிருப்பது ராஜதானியாகிய **புஜங்காபுரி**க்கு மேற்றிசையில் முப்பது மைல் தூரத்திலிருக்கிற **திருநல்லூர்.** என் முன்னோர்கள் யாதோ ஓர் காரணத்தினால் அவ்வூரைவிட்டுப் புஜங்காபுரி போய் வசித்தார்கள். அவ்விடம் போனகாலம் நற்காலமாயிருந்தபடியால், அப்பொழுது அரசாண்டிருந்த **சந்திரவர்ம்மராஜ்ஜ**னிடத்தில் சேர்ந்து மந்திராலோசனைச் சபையில் தலைமைபெற்றிருந்தார்கள். ஆறேழு தலைமுறையாக அங்கேயே வசித்தார்கள். அவ்வம்சத்தில் கடைசியானவர் என் தந்தையாகிய **நத்திரமூர்த்தி** ஐயரென்பவர். அவர் மஹா கீர்த்தியோடு குடிகளெல்லாரும் புகழும்படி மந்திரியுத்தியோகஞ்செய்து தன்காலத்தைப்பின்னிட்டார். அவரிறந்தவிரண்டு வருஷத்துக்குள் என்மாதாவும் சிவபதமடைந்தாள். அப்பொழுது நான் ஒன்பது வயதுள்ள சிறுவனாதலால் அங்கே வந்திருந்த என் தாயாருடைய இளைய சகோதரராகிய **முத்துச்சுவாமி** ஐயர் என்னைத் திருநல்லூருக் கழைத்துக்கொண்டுபோய் வைத்திருந்தார். எனக்குக் கல்வியில் அதிக பிரியமாயிருந்தபடியால் மாமாவிடத்தில் படித்தது போதாதென்று, மேலும் விருத்தியாக்கக் கருதி, **புஜங்காபுரி**க்குப்போய், என்னுடைய ஆஸ்திகளைச் சுதந்தரித்துக்கொண்டு, என் முன்னோர்கள் வசித்துக்கொண்டிருந்த அரண்மனையிலேயே யிருந்துகொண்டு, கல்வி கேள்விகளிற் சிறந்த **திரியம்பக தீட்சி**தரிடத்தில் பலவகையான சாஸ்திரவாராய்ச்சிகளைச் செய்து கொண்டிருந்தேன். அடிக்கடி ராஜசபைக்குப்போய் வருவதுண்டு. அரசனாகிய ராஜேந்திரன் என் தகப்பனாரிடத்தில் பயபக்தி விசுவாச முள்ளவராதலால், என்னுடைய நிலைமைக்கிரங்கி, யென்னைப் பட்சமாய்ப் பரிபாலித்துவந்தார். என் தந்தையினுத்தியோகத்தை யொப்புக்கொள்ளும்படி பல முறை பரிந்து கூறினர். மஹாராஜாவே! நான் அதிபாலியனன்றோ! இந்தப் பெரிய

பாரத்தைச் சுமக்கமாட்டுவேனோ! தவிர எனக்குச் சகல சாஸ்திரங்களையு மாராய்ந்தறிய விருப்பமிருக்கிறது. இந்த வேலை யதற்குப்பெரிய இடையூ றாகும். தமது பெருங்கருணையுள்ளபொழுது எனக்கொரு குறைவுமுண் டோ! இன்னஞ் சிலகாலம் கல்விபயின்று, பின்னர் தமது ஆக்கினையைச் சிரமேல் வகிக்கச் சித்தமாயிருக்கிறேனென்று பணிவோடு நான் சொல்லிய வார்த்தைக்கு அரசன் மகிழ்ந்து, அரசாங்கவித்துவான்களை நோக்கி, யிந்தக் குழந்தைக்கு மனந்திருப்பதியாகுமட்டு முங்களுக்குத் தெரிந்தவைகளை நன்றாய்ப் போதியுங்களென்று கட்டளையிட்டார். அன்றுமுதல் என் சொந்த உபாத்தியாயர் திரியம்பகதீட்சிதரிடம் கல்வி பயின்ற காலம்போக மற்றக் காலத்தை வீண்போக்காமல் அரசாங்க வித்வான்களிடம் போய்க் கல்விபயின்று ஆறு வருஷத்துக்குள் சகல கலாவல்லவனென்று யாவரும் புகழும்படி கல்வியிற் சிறந்து வருவதை யரசன்கண்டு, மிக மனமகிழ்ந்து, ஒரு நல்ல நாளேற்படுத்தி, அன்றையதினம் சகல வித்வான்களையும், அழைத்துச் சபைகூட்டி என் கல்வியைப் பரிட்சித்துப் பார்த்து எல்லாச் சாஸ்திரங்களிலும் நானீடில்லாமல் விளங்குவதுகண்டு களிகூர்ந்து, அந்நக ரத்தில் ஓர் சர்வகலாசாலை ஸ்தாபித்து, அதற்கென்னைத் தலைமையாக்கிய துந்தவிர, அடுத்த வருஷமுதல் மந்திராலோசனைச் சபையில் தலைமைவகிக் கும்படி கட்டளையிட்டுப் பின்பு, என் விவாகத்தைக் குறித்து என் மாமனி டத்திலாலோசனை செய்து தகுந்த பெண் விசாரித்துவரும்படி திட்டஞ் செய்தார். அப்பொழுது எனக்குப் பதினெட்டுவயதாய்ப் பத்தொன்ப தாம் வயது பிறந்தது. இஃதிப்படி யிருக்க, என்னுபாத்தியாயர் திரியம்பக தீட்சிதர் ஓரிரவில் என் வீட்டுக்குவந்து, என்னைத்தனிமையாக அழைத்து, அப்பா உனக்கொரு இரகசியஞ் சொல்லவந்தேன். அதென்னவென்றால், உன் தகப்பனாரிடத்தில்தான் நான் கல்விபயின்றேன். அவர் உன் சமாசார ங்களை யென்னிடம் கூறி, சமயம்பார்த்து உனக்குபதேசிக்கும்படி சொன்ன ஓரிரகசியஞ் சொல்கிறேன். உங்கள் முன்னோருக்குக் கிடைத்த பெருமையெல்லாம் அவர்களுடைய சாமர்த்தியத்தாலன்று. அவர்கள் உபாசித்ததேவதையினனுக் கிரகத்தினாலே தான். அத்தெய்வம் அநாதி நித்திய வஸ்துவாகிய ஷண்முகக்கடவுளே யாம். இது நல்ல காலமாகையால் அக்கடவுளை யாராதிக்குமுறைமையைச் சொல்லுகிறேன். அரசன் உன்னி டத்தில் வைத்திருக்கிற அன்பும், நீபெற்ற கீர்த்தியும், நாட்டுப் பிரஜைகள் உன்னிடத்தில் வைத்திருக்கிறபட்சமும் கூடி அரசாங்க உத்தியோகஸ்தர் களுக்கு உன்னிடம் பகையை யுண்டாக்கிவிட்டது. ஆதலாலுனக்குத் தேவகிருபை யவசியம் வேண்டியிருப்பதால் உங்களுடையகுலதெய்வத்தை யாராதித்து க்ஷேமத்தையடை. இதைவிட நானுனக்குச் செய்யத்தக்க

உபகாரமொன்றுமில்லை யென்றுகூறி, ஆராதிக்கின்ற முறைமையையும் தவறாமலுபதேசித்துச் சென்றனர். அதுமுதல் நான் என் தெய்வத்தைச் சதாகாலமுந் தியானித்துக்கொண்டு கவலையற்றிருந்தேன். ஒரு வருஷ காலம் உலகவாசையை முற்றுமறந்து, குரு கூறிய நெறிப்படி யொழுகி யாண்டவனைச் சதாகாலமுந் தியானித்துக்கொண்டிருக்க ஓர்நாள் ஐயன் பிரத்தியட்சமாய் "நீ ஒன்றுக்கும் அஞ்சாதே; நம்மைத் தியானித்துக்கொண்டிரு"வென்று கூறிமறைந்தருளினர். அது கண்ட நான் அளவிடப்படாதவானந்தமடைந்து, இனி யெப்பொழுது ஆண்டவனைக் காணப்போகிறேனென்று சிறிது கலங்கிப் பின் இன்று காட்சியருளிய தெய்வமென்றும் நமக்கருள் செய்யுமென்று தேறி, நான் படித்த சாஸ்திரங்களும், நான் பணிந்து போற்றிய பெரியோர் கூறிய அநுபவ வசனங்களும், பொய்படவில்லையே; யாவுமுண்மையாக விருக்கின்றனவே. இங்ஙனமாகத் தெய்வமேயில்லையென்று வீண்வாதம் செய்கின்ற பேதையர் மதிக்கென்செய்வோம். நாம் நெடுங்காலங் குருமொழி தவறாது நடந்து, உலகைமறந்து தியானஞ் செய்தபடியாலன்றோ நமக்கீசன் வெளிப்பட்டருளியது. யாதொரு முயற்சியுஞ் செய்யாமல், உண்டு, களித்து, இறுமாந்து, உலகவாழ்வையே மெய்யென்று கருதித் தெய்வசிந்தையென்பது சிறிது மில்லாமல் திரிகின்ற பேதையர் தெய்வமெங்கே காட்டு பார்ப்போமென்று பரிகாசம் பண்ணுகின்றார்களே; யிஃதென்ன வறியாமையென்று அவர்களது பேதைமதிக்கிரங்கி, யீசனைத்தியானித்துக்கொண்டே யிருந்தேன்.

பின்பு பெண் விசாரிக்கச்சென்றிருந்த என் மாமா பல விடங்களிலுஞ் சுற்றி யலைந்து திரிந்தும் மனதுக்குப் பிடித்த பெண்ணகப்படாமல், என்னிடந் திரும்பிவந்து, பெரிய விடங்களிற் பெண் விசாரிப்பதிற் பயனில்லை. நீ திருநல்லூருக்கு வந்து சிலகாலமிருந்தால் உன் மனதுக்கிசைந்த பெண்ணைப்பார்த்து விவாகஞ் செய்யக்கூடுமென்று நினைக்கிறேனென்று சொன்னார். நானரசனிடத்திலுத்தரவு பெற்றுக்கொண்டு இரண்டு மூன்று நாட்களில் வருகிறேனென்றுசொல்ல, மாமா எனக்கு அவசரமான வேலையிருப்பதால் நானின்றே புறப்பட்டுப் போகிறேன். நீ சீக்கிரம் வாவென்று கூறிச் செலவுபெற்றுக்கொண்டு போய்விட்டார். நான் மறுநாளிராஜனைக்கண்டு மாமா கூறியவற்றைக்கூறி யூருக்குப்போக விடை கேட்டேன். அரசன் அரைமனதாய்ச் சம்மதித்து, மூன்று மாதத்துக்குள் வரவேண்டுமென்றும், விவாகம் ராஜநகரத்திற்றானே நடத்தவேண்டுமென்றுங் கூறி விடைகொடுத்தனுப்பிவிட்டார். அன்றுபோக மறுநாள் நான் சிறிது வேலைக்காரர்களோடு புறப்பட்டுப்போனேன். திருநல்லூருக்குப் பத்துமைல் தூரத்திலேயே யிருட்டிப்போயிற்று. என் வேலைக்கார

ரைப்பார்த்து, இருட்டிப்போயிற்று, இன்னும் பத்துமைல் தூரமிருக்கிறது, இன்றிரவு தங்கிப்போவதற்கு வசதியானவிடஞ் சமீபத்திலுண்டோவென்று விசாரித்தேன். அவர்கள் அரைமைல்தூரத்தில் முந்தனூரென்று ஓர் ஊரிருக்கிறதென்றும், அங்கே வழிப்பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான சத்திரமொன்றுண்டென்றும் சொன்னார்கள், அப்படியானால் இரவுப்பொழுதை யங்கே கழித்துக், காலையி லெழுந்துபோவோமென்று வேலைக்காரருடன் முத்தனூர்ச் சத்திரத்திலிறங்கி வேலைக்காரர்களைச் சமைக்கும்படி திட்டஞ் செய்துவிட்டு, நானெதிரிலிருந்த குளத்தருகிற் போய் மாலைக்கடனை முடித்துக்கொண்டு, ஆண்டவனைச் சிந்தித்துக்கொண்டிருந்தேன். அவ்விடம் வெளிச்சத்திற்காகத் தீபமிட்டிருந்தது. ஜபத்தை முடித்து எழுந்திருக்குஞ் சமையத்தில், ஒரு சிறிய பிராமணப்பெண் தண்ணீருக்குவந்து, நீரெடுத்துக்கொண்டு திரும்பினள். அத்தருணத்தில் என் வேலைக்காரர்கள் வந்து சுவாமி சமையலாயிற்றுப் போஜனஞ் செய்ய வாருங்களென்றழைத்தார்கள். அப்பொழுது அந்தச் சிறியபெண் என் முகத்தைத் திரும்பிப்பார்த்தாள். நானும்பார்த்தேன். பார்த்தவுடன் அப்பெண்மணியின் மந்தகாசத்தோடு மலர்ந்த செந்தாமரைபோன்ற முகமான தென்மனதைக் கவர்ந்து கொண்டது. அந்தப் பெண்ணின்முகத்தில் இலட்சுமிகளைதவழ்ந்தது. அகத்து அழகு முகத்திற் காட்டுமாதலால், அவளிடத்துள்ள நற்குணங்களெல்லாமுகத்தில் வெளிப்பட்டன. இந்தப் பெண்ணை விவாகஞ்செய்யக் கூடுமானாலதுவே நம்பெரும் பாக்கியமாகுமென்று மனதிற் சிந்தித்துக்கொண்டெழுந்திருந்தேன். அப்பெண் தண்ணீர்க்குடத்தைத் தூக்கமாட்டாமல் பொற்கொடிபோல் ஒசிந்து, அன்னம்போல மெதுவாக நடந்து, கண்களாகிய வேலாயுதத்தையேவியென்னிதயத்தைக் கலக்கிவிட்டுப்போயினள். நானும்பின்னாக நடந்தேன். அப்பெண் சத்திரத்தில் நான்றங்கியிருந்த அறைக்கு அடுத்த அறையிற்போய்ப் புகுந்தாள். நல்லதென்று நான் போய்ப் போஜனத்துக்குட்கார்ந்தேன். சரியாக சாப்பிடவில்லை. சமையற்காரன் என் தகப்பனார் காலமுதல் என் வீட்டிலிருப்பவனும், என்னை வளர்த்தவனுமாதலால் ஏனுண்ணவில்லை? மனதிலென்னகவலை புகுந்தது ? யோசனையென்ன வென்றான். நான் பதில் கூறாமல் உண்டு கை கால் சுத்திசெய்துகொண்டு, அந்தப்பெண் சென்ற அறைக்குச் சமீபத்தில் படுக்கை போடச்சொல்லி,இன்னமொருதரம் அப்பெண்மணியின் முகாரவிந்தத்தைப் பார்க்கக்கூடுமானால் அது என் பாக்கியமாமென்றெண்ணிக்கொண்டே யிருந்தேன். அச்சிறுபெண் மறுபடியும் வெளியில் வந்து என்னைப்பார்த்துப் புன்முறுவல் செய்துகொண்டுள்ளே புகுந்தாள். அது என் மனக்கவலையாகிய அக்கினிக்கு நெய் சொரிந்து இந்

தனமிட்டாற் போலாயிற்று. என் பரிசாரகன் வந்து, என் பக்கத்திலுட் கார்ந்துகொண்டு, அப்பா உன்னைப் பிள்ளைபோல எடுத்து வளர்த்தபடியால், நீ சாப்பிடாமலிருக்கிறது என் மனதை வருத்துகிறது. இன்றளவு மில்லாத கவலை யின்றெங்கேயிருந்துவந்தது ? உனக்குக் கவலைவருவானேன் ? என்னிடஞ் சொல்லக்கூடாத இரகசியமென்ன ? என்னை நீ தாயுந்தந்தையுமாக மதித்திருக்கிறேனென்று கூறுகின்றாயே. எனக்கு மறைப்பதென்ன ? உண்மையைச் சொன்னால், அது எதுவானாலு மென்னாற்கூடியவரை பிரயாசப்படமாட்டேனோ ? ஒளியாமற் சொல்லு என்று பிடிவாதமாயுட்கார்ந்துகொண்டு எழுந்திருக்கமாட்டேனென்று பலவந்தப்படுத்திக்கேட்டான். நானுமறைப்பதற்கு இது சமையமல்லவென்றுகண்டு, இவன் மூலமாய்ப் பேசிப்பார்க்கலாமென்று கருதி மனக்கருத்தை யவனிடம் வெளியிட்டு, அப்பெண்ணை மணந்தால் அதுவே யென்பாக்கியமென்று கூறி முடித்தேன். அதற்குப் பரிசாரகன் இதற்குத்தானா இத்தனைகவலை. விடிந்தவுடனே பேசி முடித்துக்கொண்டு இன்னமெட்டுநாளைக்குட் கல்யாணஞ் செய்துவைக்கிறேனென்று சபதங்கூறிப் பக்கத்திற்படுத்துக்கொண்டு நித்திரை போய்விட்டான். எனக்குத்தூக்கம் வரவில்லை. நாழிகை பதினைந்தாய் விட்டதென்று நட்சத்திரத்தாற்கண்டுகொண்டு சற்றுலாவி மறுபடியும் வந்து படுத்துக்கொள்ளப்போகையில், அப்பெண்ணிருந்த அறைக்குட் பேச்சுக்குரல்கேட்டது. மெதுவாகப் பேசினபடியால் சப்தமாத்திரங் கேட்டது. இத்தனை நாழிகைக்குமே லென்னபேச்சுப் பார்ப்போமென்று உற்றுக்கேட்டேன். அம்மா ! உன் தகப்பனாரிருந்தால் உனக்கு இத்தனை காலம் கல்யாணமாயிருக்கும். பதினொருவயதாகியு மின்னமுனக்குக் கல்யாணமாகவில்லையே. ஜோதிடத்தில் வல்லவராகிய உன் தந்தையார், இந்த மாதத்திலே,தானுனக்கு விவாகம் நிறைவேறுமென்றும், பெரிய பிரபுவை மணந்து, உலகமதிக்க வாழ்வாயென்றுங்கூறினார். அவ்வாக்கியமும் நிறைவேறாமற்போயிற்று. ஆதாலாலினிச் சும்மாவிருக்கலாகாது. உன்னுடைய மாமாவின் குமாரன் இலட்சணமுள்ளவனாகவும், சொத்துள்ளவனாகவுமிருக்கிறான். அவனுக்கு மணமுடிக்க உத்தேசித்திருக்கிறேன். நாளைக்காலமே யொரு ஆளையனுப்பி அவனை யழைத்துவரச் சொல்லலாமென்று நினைத்திருக்கிறேன். நாமிப்போதிருக்கிற நிலைமைக்கு ஏழைக்குடும்பமே தகுதியாவதன்றி, எந்தப்பிரபு நம்மைத்தேடிவரக் காத்திருக்கிறான். பிரபுவாயிருப்பவன் தன்னைவிட மேலானவிடத்தைப் பார்ப்பதேயன்றிக் குணவிசேஷத்தையும், குலமேன்மையையுங் கவனிப்பதில்லை. உன் கருத்தென்ன அம்மணீ யென்றாள். சற்றுநேரம் பொறுத்து அம்மா நீ சொல்வது சரிதான். ஆனாலும் எனக்கென்றுமில்லாத ஓரற்புதநற்குறி தோன்றுகிறது. நற்காலம்

வருமென்று காண்கிறது. தவிர நமதறைக்குப் பக்கத்தில் வந்திறங்கியிருக்கிறாரே ஓர் பிரபு. அவரிடத்திலெனக்கு மனஞ்செல்கிறது. இவ்விடம் அநேகம் பிரபுக்கள் வந்திறங்கி யிருந்ததைப் பார்த்திருக்கிறேன். அவர்களைக் காணும்போது பயமாக இருக்குமேயன்றி மனதுக்கோர் சந்தோஷமிருந்ததில்லை. இவரைக் கண்டமாத்திரத்தில் என் மனமுருகுகிறது. அன்பு நாணமுமேலிடுகின்றது. இம்மாதமின்னமெட்டு நாளிருக்கின்றதே. அதற்குள் அப்பா வாக்குப்போற்பலித்தாலாகாதோ? வென்று கூறினள். அதற்குப் பதிலாக அம்மணி ! சரிதான். ஆனால் அதைப்பேசி முடிப்பவரார்? அன்றியும் அந்தப்பிரபு ஏழையாகிய நம்மை மதிப்பாரோ ? என்ற வசனம் வெளிப்பட்டது. அந்தப்பெண், அப்பாவின் வாக்கியப்படி நான் கௌரி பூஜைசெய்து வருகிறேனல்லவா? ஒருக்கால் அம்மன் கூட்டிவைக்கலாகாதோ? என்று கூறினள். இதுகளைக்கேட்ட நான் உள்ளத்துக்கடங்காத மகிழ்ச்சியடைந்து, நம் காரியம் பலித்துவிட்டதென்று நித்திரைபிடியாமல் படுத்துக்கொண்டிருந்தேன். விடிய ஒரு நாழிகைக்குமுன் பரிசாரகனெழுந்திருந்து என்னைப்பார்த்து அப்பா நான் சொல்லியுங் கேட்கவில்லையா ? நானிந்தக் காரியத்தை முடிக்கிறேனென்று கவலையற்றுத் தூங்கினதினாலேயே காரிய முடிவாகுமென்று நீ நினைக்கவேண்டாமா ? இவர்களை நான் நன்றாயறிவேன். இப்பெண்ணினுடைய தந்தையார் உன் தகப்பனாரோடு உத்தியோகஞ் செய்திருந்தவர். உன் தந்தைக்கு உயிர்த்தோழர். நல்ல குலத்திற்பிறந்தவர். தரும சீலராதலால் தமது பொருளையெல்லாந் தருமத்திற் செலவழித்துவிட்டார். இப்பொழுது இந்தக் குடும்பமிளைத்திருக்கிறது. இந்தப் பெண்ணுக்குத் தாயாரை நன்றாயறிவேன். அந்த அம்மாளுமுன்னையறிவாள். உன் தந்தைபேர் சொன்னமாத்திரத்தில் ஆட்சேபனை செய்யாமல் கொடுத்துவிடுவாள். அவர்கள் நித்திரை தெளிந்தெழுந்திருந்ததும் கண்டு பேசிக் காரியத்தை முடிக்கிறேன். நீ காலைநியமம் முடித்துக்கொள்ளென்று சொல்லி என்னை ஸ்நானத்துக்கனுப்பிவிட்டான். நான் போனபின் சிறிது நேரத்துக்கெல்லாம் பரிசாரகனென்னிடம் வந்து உன் காரியம் பலித்தது. அந்த அம்மாளுன்னைப்பார்க்க மிக ஆவலாயிருக்கிறார்கள் என்றான். நான் ஸ்நானம், சந்தியாவந்தனாதிகளை முடித்துக்கொண்டு பின்பு, அவ்வறைக் கருகாமையிற் செல்லும்போது அந்தம்மாள் என்வருகைக்கு எதிர் பார்த்திருந்தாள். என்னைக் கண்டவுடனோர் மணையிட்டு உட்காரும்படிசெய்து, சற்று எட்டி நின்றுகொண்டு, ஐயா! உங்கள் தாயாரும் நானுமுயிர்த்தோழிகளாயிருந்தோம். உமது தந்தையை நன்றாயறிவேன். நீர் எனது பெண்ணுக்கு மணவாளனாகும்படி நியமித்திருந்தால் அது என் பாக்கியமல்லவோ! அந்தப்பெண்ணின் குணம் உம்மி

டத்திலிருந்தாற் பிரகாசிக்கும். உமக்கு எப்பொழுது இஷ்டமோ? அப்பொழுது விவாகம் செய்து கொள்ள யாதொரு தடையுமில்லையென்று கூறி அப்பெண்ணை யென்னெதிரில் வரும்படிசொல்ல அப்படியே தன் தாயாருக்குப் பக்கத்தில்வந்து நின்றாள். பிள்ளையவர்களே அந்தப்பெண் தானிந்த விஜயலட்சுமி;நான் விஜயலட்சுமி என் மனைவியாவதுபற்றிமிக மகிழ்ச்சியடைந்தேன். என் மாமியார் என்னைப்பார்த்து இன்று இந்தக் கிருகத்திலேயே போஜனமருந்தவேண்டும் என்றுசொல்ல நானும் ஒத்துக்கொண்டேன். எல்லாரும் தத்தம் வேலையிற் பிரவேசித்தார்கள். நான் பஞ்சாகத்தையெடுத்துப்பார்த்ததில் அடுத்த வெள்ளிக்கிழமை நல்லமுகூர்த்தநாளிருப்பது கண்டுமிகச்சந்தோஷமடைந்து, என் மாமியாரை நோக்கி அம்மா அடுத்த வெள்ளிக்கிழமை முகூர்த்தமிருக்கிறது. ஊரில்சகலசாமான்களும் கையிலிருக்கின்றன. உமது சம்மதமென்னவென்றேன். எனக்குயாதொரு ஆக்ஷேபணையுமில்லை யென்றமையால் மனமகிழ்ந்து, உடனே யென் மாமாவுக்கு ஓர் ஆளனுப்பி, மறுநாளே ராஜதானிவந்து சேரும்படி சொல்லி வரச்செய்து நான் போஜனஞ்செய்து, விஜயலட்சுமியையும் மாமியாரையுமழைத்துக்கொண்டு ஊர்வந்து சேர்ந்து, மறுநாள் விடிந்தவுடனே ராஜசபைக்குப்போய் அரசனுக்கிச்சங்கதிதெரிவித்ததும் அவர் மகிழ்ந்து, அநேகம் வேலைக்காரர்களையனுப்பிக் கல்யாணத்துக்கு வேண்டியவற்றைச் சேகரித்து வரச்செய்து தாமும் கிட்ட இருந்து விவாகத்தை நிறைவேற்றிவைத்தார். பிறகு நான் மந்திரசபைக்குத் தலைமைவகித்து ராஜகாரியங்களை நடத்திவந்தேன். அரசனும், பிரஜைகளுமகிழ்ந்து என்னை உயிர்போல நேசித்தார்கள். விஜயலட்சுமிக்குப் பதினெட்டாம் வயதிலிந்தக் குழந்தைபிறந்தது. இதற்குவயதிரண்டாகிறது. இப்படியிருக்கையில் ஓர்நாள் ஆண்டவன் வெளிப்பட்டு நீயிங்கிராதே உன் மாமியார் வீடுபோய்ச் சேரு என்று கட்டளையிட்டார். நானப்படியே என் மனைவியோடுகூட மாமியார் வீடுபோய்ச் சேர்ந்தேன். பத்துநாளைக்கெல்லாம் அரசன்திடீரென்றிறந்துபோனதாகக் கேள்விப்பட்டேன். மனமிகவருந்தி யுடனே யரசபத்தினிக்கும்அவரது இளங்குமரனுக்குந் தேறுதலைச் சொல்லவேண்டுமென்றிருக்கையில் ஆண்டவனெதிர்ப்பட்டு நீ யிராஜநகரம்போகாதே. நாலுநாளிங்கிருந்து ஐந்தாநாளுன் மனைவி, குழந்தையோடு புறப்பட்டு வடதிசைநோக்கிச்செல் பத்துவருஷகாலம் நீ கஷ்டப்படவேண்டியிருக்கிறது. பத்துவருஷத்துக்குமேல் நாலுவருஷகாலம் உன் புத்திரன் உன்னை விட்டுப்பிரிந்து போவான். பிறகு அவன் பெரிய அரசனாக வருவான்.

தேவகுஞ்சரி அம்மாள்.

(இன்னும் வரும்.)

## ஸிம்பலீன்.

இங்கிலீஷ் கவிராயருக்குள் சிறந்தவராகிய ஷேக்ஸ்பியர் அநேகவிதமான நாடகங்கள் செய்திருக்கிறார். அவைகளில் ஸிம்பலீன் என்ற நாடகத்தை இங்கு பிரசுரிக்கிறோம்.

### 1-அத்தியாயம்.

ப்ரிட்டன் தேசத்தையரசாண்டுவந்த அரசனாகிய காஸிபீலானிடத்தில் ராணுவவீரனாயிருந்த **ஸிஸிலியஸ்** என்பவன் ரோமன்ஜாதியருக்கு விரோதமாய்ச் சண்டைசெய்து ஜெயித்து **டெனான்ஷியஸ்** என்னுமரசனால் **லியோநாட்டஸ்** என்னும் பட்டத்தைப்பெற்றான். லியோநாட்டஸ் என்றால் சிம்மத்தைப்போன்றவனென்றருத்தம். ஸிஸிலியஸ் என்பவனுக்கு இரண்டு புத்திரர்களிருந்தார்கள். அவர்களிருவரும் சண்டையில் மாண்டுபோன ஏக்கத்தினால் ஸிஸிலியஸும் இறந்துபோக, அவனுடைய மனைவியப்பொழுது கர்ப்பவதியாயிருந்து ஒரு குழந்தையைப்பெற்று இறந்துபோய்விட்டாள். அந்தக்குழந்தையைப் ப்ரிட்டன் தேசத்தரசனாகிய ஸிம்பலீன் என்பவன் எடுத்து "பாஸ்துமஸ்" என்றபெயரையிட்டுத்தன் படுக்கையறையிலொரு வேலைக்காரனாக நியமித்துத் தன் குழந்தையைப்பார்க்கிலும் பத்துப்பங்கதிகமாய் வளர்த்தும், தன்னால் கூடியசிரமமெடுத்து உயர்ந்த கல்வியையுங் கற்பித்துவந்தான். பாஸ்துமஸோ சாதாரணமாயுள்ள பிள்ளைகளைப்போலிராமல் கூடிய சீக்கிரத்தில் கல்வியைக்கற்று யாவராலும் புகழப்பட்டும், நேசிக்கப்பட்டும், தன்னைப்போலிருக்கிற மற்றப் பிள்ளைகளுக்கு ஒருரத்னம்போலவும் வயது சென்றவர்களுக்குத் தங்கள் பிம்பத்தைக்காட்டக்கூடியவொரு கண்ணாடிபோலவும் வளர்ந்துவந்தான். ஸிம்பலீனுடைய புத்திரியாகிய இமோஜன் சிற்றரசர்கள் யாவரையும் விட்டுவிட்டு இவனைக்கலியாணஞ் செய்துகொண்டாளென்றால் பாஸ்துமஸுடைய பெருமையையும் யோக்கியதையையும் குணங்களையும் விசேஷமாய் நாம் வரித்தலரிதாகும்.

இப்படியிருக்க ஸிம்பலீனுக்கு இரண்டு புத்திரர்களும், **இமோஜன்** என்ற ஒரு புத்திரியு மிருந்தார்கள். புத்திரர்களிருவரையு மிளமைப்பருவத்தில் யாரோவொருவர் எவருமறியாமல் அபகரித்துக் கொண்டுபோய்விட்டார். ஆகையினால் ஸிம்பலீனுக்குப் பிற்பாடு பட்டத்துக்கு வரவேண்டியது இமொஜனே. ஸிம்பலீன் தன் மனைவியையிழந்த பின் வேறொரு ஸ்திரீயைக்கலியாணஞ் செய்துகொண்டான். இம்மாதுக்கு முதல் பர்த்தா மூலமாய் க்ளோட்டன் என்றொரு புத்திரனுண்டு. இவ்விருவருடைய குணங்களைப் பின்னால் நாமறியலாம். இமொஜன் பட்டத்துக்கு வருவதி

னால் க்ளோட்டன் அவளைக் கலியாணஞ் செய்துகொண்டால் தன் புத்திரன் பட்டத்துக்கு வருவனென்கிற எண்ணத்தினால், இவ்விருவருங் கலியாணஞ் செய்துகொள்ள வேணுமென்று வேண்டிய சிரமமெடுத்தும் சரிப்படாமற்போய்விட்டது. ஆனால் இமொஜன் க்ளோட்டன்மேல் தான் வெறுப்படைந்து, நாம் ஒரு புழுவைக்கண்டால் எவ்விதம் வெறுத்தோடிப் போவோமோ, அதே மாதிரியாக அவள், க்ளோட்டனைக் கண்டமாத்திரத்தில் அவன் முன்னிற்காமலேயோடிப்போவாள். இமொஜனுக்கோ, பாஸ்துமஸ்பேரிலதிகப் பிரியம் வந்து தன் தகப்பனை விரோதித்து இரகஸியமாய் அவனைக் கலியாணஞ் செய்துகொண்டாள். அதினாலரசனுக்கும் அவன் மனைவிக்குமிவர்கள்பேரில் கோபம் ஜனிக்க, பாஸ்துமஸை நாட்டைவிட்டுப் போகும்படியா யுத்தரவளித்தான். அப்போது அரண்மனையிலுள்ளவர்களுக்கும் மற்ற ஜனங்களுக்குமுண்டான விசனத்திற் களவில்லை. இமொஜன் துக்கத்தையோ நம்மால் சொல்லிமுடியாது. எல்லாரும் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். இப்படியிருக்க ஒருநாள் அரசன் மனைவி, இமொஜன் பாஸ்துமஸ் இம்மூவர்களும் தற்செயலாயோரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அரசன் மனைவி இமொஜனைப் பார்த்து "எல்லாசிற்றன்னைகளும் தங்களுடைய பர்த்தாக்களின் குழந்தைகளையியல்பாகவே கஷ்டப்படுத்துவார்கள். நான் அவர்களைப்போலிராமலுன்னை யெப்பொழுதும் பிரியமாய் வளர்த்துக்கொண்டு வருகிறேன். நீ இப்பொழுது உன் பர்த்தாமூலமாய்த் துன்பப்பட்டாலும் உனக்கு க்ஷேமத்தையென்னால் தரக்கூடும். பாஸ்துமஸே! அரசனதிக கோபத்துடனிருக்கிறான். கோபமதிகரிக்கு முன்னிந்த நாட்டைவிட்டோடிப்போ. அரசன் உங்களை யொருவரோடொருவர் பேசவேண்டாமென்று சொல்லியும் கேட்கவில்லை. இப்பொழுதரசனைக் கூட்டிக்கொண்டுவருகிறேன்" என்று சொன்னாள். அப்பொழுது இமொஜன், "என்ன அநியாயம்! பழுக்கக்காய்ச்சின இரும்பைப் புண்ணில் நுழைத்தாற்போலிருக்கிறதே. பிராணநாதா! என் தகப்பன் கோபத்தைப் பார்க்கிறபோது பயமாயிருக்கிறதே. ஆனாலவருடைய கோபமென்ன செய்யும் ஐயோ நீங்கள் போகவேண்டி யிருக்கிறதே. நானோ இவர்களுடைய கோபத்துக்குள்ளாகி ஒவ்வொரு நிமிஷமும் துன்பப்படவேண்டியதாயிற்றே. ஆனால் உங்களை யெப்பொழுதாவதினிப் பார்க்கலாமென்கிற தைரியத்துடன் எனதுயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி அழுதாள். அதற்குப் பாஸ்துமஸ் "என் கண்மணியே; பிராணநாயகி; வீணாயழவேண்டாம். அழுதால் நான் தைரியமில்லாமற் போய்விடுவேன். உலகத்திலுள்ள மனிதர்களைப்பார்க்கிலும் பதிவிரதாதர்மத்தை நான் அதிகவிசுவாசத்துடன் காத்துக்கொண்டுவருகிறேன். அதைப்பற்றி நீ பயப்

படவேண்டாம். ரோமாபுரியில் என் தகப்பனுடைய இஷ்டனுகிய பிலாரியோ வீட்டில் நான் தங்கியிருப்பேன்; அந்த இடத்துக்கு ஏதாவது எழுதவேணு மானுல்எழுது. எப்பொழுதும் உன் கடிதத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். பிரியஸகி ! நான் போய்வருகிறேன். எனக்காக நீ வருத்தப்படாதே என்று சொல்ல, அதற்கு இமொஜன் "ஏ பிராணநாதா! அவசரப்பட வேண்டாம் இதோ பார் ! இந்த மோதிரம் என்னுடைய தாயாருடையது. இமொஜனிறந்துபோய் வேறே கலியாணஞ்செய்துகொள்ளுகிறவரையில் இதைப் பத்திரமாய் வைத்துக்கொள். என்னை மறந்துவிடாதே" என்ருள். அப்பொழுது பாஸ்துமஸ் "வேறே கலியாணஞ் செய்து கொள்ளவா ! தெய்வமே, நான் வேறே கலியாணஞ் செய்து கொள்வதைப் பார்க்கிலும் இப்பொழுதே உயிரை விடுகிறது நல்லதே ! (மோதிரத்தை யெடுத்துப் போட்டுக்கொண்டு சொல்லுகிருன்.) பிரியசகி ! என் கரும்பே ; தங்கமே ! நான் ஒரு தாழ்ந்த வம்சத்தில் பிறந்து இராஜ கன்னிகையாகிய உன்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டது போலவே, இப்பொழுது நீ தந்த அதிக விலையுயர்ந்த மோதிரத்துக்குப் பதிலாக இந்தக் காப்பைவைத்துக் கொள். இது நம்முடைய பிரியத்தைக் காட்டக்கூடிய வொரு பந்தம் (அடையாளம்). என்னை ஒருபொழுதும் மறந்து விடாதே" என்று சொல்லிக் காப்பைக் கையிற் கொடுக்க, இமொஜனதை யெடுத்துக்கொண்டு, "ஐயோ தெய்வமே ! நான் என்ன செய்வேன் ! கதியில்லையே என் பர்த்தாவை யான் எப்பொழுது பார்க்கப்போகிறேன்" என்றுசொல்லிக் கண்ணீர் விட்டழுதாள். அச்சமயத்தில் அரசன்வந்து பாஸ்துமஸைப் பார்த்து "அடா சண்டாளா ! என் முன்னிற்காதே இனிமேல் இந்த அரண்மனைக்கு வந்தாலப்பொழுதே யிறந்தாய். ஐயோ ! என் குடும்பத்துக்கு கார்க்கோடக விஷம்போல் வந்துதித்தாயே" என்று சொல்ல, அதற்குப் பாஸ்துமஸ் "உங்களைக் கடவுள் காப்பாற்றுவராக. நானிதோ போய் விட்டேன. மற்ற எல்லாரையுங் கடவுளாசீர்வதிக்கட்டும்." என்றுரைத்துப் போய்விட்டான். உடனே பின்வருமாறு சம்பாஷணை அரசனுக்கும் இமொஜனுக்கும் நடந்தது.

இமோஜன்.—இதைப்பார்க்கினு முயிரைமாய்விக்கக்கூடிய விஷம் வேறேயுமுண்டா.

ஸிம்பலீன்.—மரியாதைகெட்டவளே ! ஏ, துரோகி! வயதுகாலத்தில என்னைக் கஷ்டப்படுத்துவா வந்தாய்.

இமொ.——வீணுய்த் துன்பப்படவேண்டாம்.

ஸிம்.—உன்னிடத்தில் கொஞ்சமாகிலும் மரியாதை யில்லாமற் போய்விட்டதே !

இமொ.—விமோசனத்துக் கிடமில்லாமற் போய்விட்டது. வக்கத்துக் குள்ளானேன். ஆகையால் மரியாதை யென்னைவிட்டோடிப்போய் விட்டது.

ஸிம்.—என் பத்தினியின் புத்திரனை யேன் கலியாணஞ்செய்து கொள்ளக் கூடாது ?

இமொ.—விலையுயர்ந்த மாணிக்கமிருக்கத் தெருவில் கிடக்கும் சரல்கல்லை யாராவது விரும்புவார்களா! என்னுடைய நல்ல காலத்திலவனை விரும்பாமலிருந்தேன்.

ஸிம்.—நீ யொருதரித்திரனைக் கலியாணம்பண்ணி, என் சிம்மாசனத்தின் மகிமையைக்கெடுத்து, அதற்கொரு அபகீர்த்தியைக் கொண்டுவந் தாயே!

இமொ.—நான் விலையுயர்ந்த ரத்னத்தையல்லவா கொண்டுவந்தேன் ! சிம் மாசனத்தில் ஒரு ரத்னத்தைப் பதித்தால் எவ்வளவு பிரகாசமாயிரு க்குமோ, அதேமாதிரியாக நம்முடைய இராஜ்ஜியம் நனறாய் விளங்க ப்போகிறதைப் பார்க்கலாம்.

ஸிம்.—ஓ, சண்டாளி! என்ன சொல்லுகிறாய்.

இமொ.—நான் பாஸ்துமஸை நேசித்தது என்னுடைய குற்றமல்ல, உங்க ளுடையதே. நீங்கள் என் அவரை என்னுடைய தோழனாகவளர்த் தீர்கள்? அவரைப்போல மேன்மையுள்ளவனை நானிதுவரையில் பார்த் ததில்லையே. நான் ஒரு காசுபெறமாட்டேன். அவருக்கோ எவ்வ ளவு விலைகொடுத்தாலும் ஈடாகாது.

ஸிம்.—என்ன சொல்லுகிறாய். உனக்குப் பைத்தியம் பிடித்ததா?

இமொ.—அனேகமாய்ப் பைத்தியம் பிடித்துவிட்டது. கடவுளே என்னைக் காப்பாற்றவேண்டும் ! நான் ஒரு இடையர்வம்சத்தில் பிறந்து என் னுடைய **லீயோநாட்டஸ்** (பாஸ்துமஸ்) அடுத்த இடையன் வீட்டில் பிறந்திருந்தால் எவ்வளவோ சந்தோஷமாயும் பாக்கியசாலியாயு மிருந்திருப்பேன். தெய்வமே இக்கதியையடைந்தேனே !

ஸிம்.—சீ, முட்டாள் ! என்னசொல்லுகிறாய்.

என்றிவ்விதம் பேசிக்கொண்டிருக்கிற சமயத்தில் அரசன் மனைவியங் கேவர, அரசன் சொல்லுகிறான்.

ஸிம்.—இதுவரையில், அவர்களிருவரும் ஒன்றாய்த்தானிருந்தார்கள். நான் சொன்னதை நீ செய்யவில்லைபோல் தோன்றுகிறது. அவளைக் கூட் டிக்கொண்டுபோய்ச் சிறைச்சாலையிலடை.

மனைவி.—கோபித்துக்கொள்ள வேண்டாம். பொறுத்துக்கொள்ளவேணும். எங்களைத் தனியாய் விட்டுப்போங்கள் நாங்கள் தக்க ஏற்பாடு செய்து கொள்ளுகிறோம்.

ஸிம்.—வேண்டாம். இந்தத் தப்பிதத்திற்காகத் தினம் ஒருதுளி இரத்தம் சிந்தித் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளட்டும்,

மனைவி.—பெண்ணே, அரசன் சொல்வதைக்கேள் வீணாய்க் கோபத்துக் கிடமாக்காதே" என்று சமாதானப்படுத்தி அரசன்மனைவி போய் விட்டாள்.

வி. கோபால ஐயங்கார் B. A.

(இன்னும் வரும்.)

## புற்புலத்துநெட்டிலிங்கமையர் வைபவம்.

### 2 - ம் அத்தியாயம் : புற்புலம்.

இந்தப் பெருஞ்சீரகவல்லி என்னும் நகரத்தின் வடபாகத்தில் புற்புலம் என்றொரு சிறிய உபகிராமம் உண்டு. அதில் விசேஷமாய் உடையார்கள் என்ற வேளாளசாதியர்கள் குடியேறியிருந்தார்கள். இவர்கள் வேளாளர்கள் என்றாலும் இந்த உலகநாகரீகம் ஒன்றுமே அறியாத பாமரஜனங்கள். அவர்களில்ஒருவனுக்காவது எழுதப்படிக்கத்தெரியாது. வெள்ளை வேஷ்டியைக்கண்டால் ஒருநாழிகைவழிதூரம் பயந்தோடுவார்கள். உடையானுடைய உடுப்பு சாதாரணமாய் ஒரு கௌபீனம்; மழைகாலத்தில் ஒரு முரட்டு கம்பளப்போர்வை; மற்ற காலங்களில் 24-முழமுள்ள இரண்டாய் மடித்த கெட்டித்துப்பட்டி; வேலைசெய்யும் வேளைகளில் இந்தக்கம்பளத்தையோ அல்லது துப்பட்டியையோ ஒரு மரத்தில் அல்லது ஒரு தாழங்குடையின்கீழ் வைத்துவிட்டு வேலை செய்வார்கள். உடையான் ஜாதிகளில் ஒவ்வொருவரும், ஆணும் சரி பெண்ணும் சரி, வெகு உழைப்பாளிகள். பெண்டுகள் பெரும்பாலும் மேலில் துணிபோடாமல் இடுப்புக்குக் கீழ் 12 - 13-முழமுள்ள ஒரே புடவை கட்டியிருப்பார்கள். ஆணும் பெண்ணும் இரட்டைநாடியாய் யிருப்பார்களே யல்லாது அவர்களுள் ஒற்றைநாடி காண்பதுவெகு அபூர்வம். இப்படி இவர்களிருப்பதற்கு இவர்கள் ஆகாரம் முக்கியகாரணம். உடையான் ஒவ்வொருவனும் பயிரிடுவது நெற்பயிராயிருந்தாலும், அவன் சாப்பிடுவது கம்பு, கேழ்வரகுதான்; ஒவ்வொரு வேளைக்கு ஒரு பழுத்த பரங்கிக்காயை முழுமையும் கறிசெய்து ஒரு உடையான் சாப்பிட்டுவிடுவான். அவர்கள் விசேஷமாய் சாகபுக்கிகள் என்றாலும் கிடைத்தபொழுது ஆட்டிறைச்சி புசிப்பார்கள். இம்மாதிரிகொஞ்சத்துணி உடுத்தபோதிலும் உடையான் தேகத்தைப்பார்த்தால் அது நிர்மலமாயிரு

புற்புலத்து உடையான்.

க்கும். பெரும்பாலும் எல்லாரும் கறுத்திருப்பார்கள். ஆனால் அவர்கள் தேகத்தில் மறுமாசு என்பது ஒன்றுகூட இல்லாமல் விசாலமார்பும், தேகத்தில் சதைப்பற்றும் கையும் காலும் கடைசல் பிடித்ததுபோல் அவர்கள் விளங்குவார்கள். அவர்கள் உருவம் வெகு லட்சணமாயிருக்கும். எல்லாரும் சைவர்கள்; திருநீறு பூசப்பட்டவர்கள். இவர்கள் ஆகாரமும் உடையும் வெகு சுலபமாதலால் ஒவ்வொருவனிடமும் பணம் யதேஷ்டம். இவர்களுக்கு விளையும் நெல்லு அவ்வளவும் பணமாய் குவிந்துகொண்டிருக்கும். சாவு வாழ்வுகளுக்கு இவர்கள் செலவிடுவது வெகு கொஞ்சம். வியவசாயசாஸ்திரம் படிக்காமலே முதன்மையான வியவசாயம், ஒரு காசு கூட செலவில்லாமல், அவ்வளவும் லாபமாய், பண்ணப்பட்டவர்கள் யார் என்றால் உடையார்கள்தான். எவ்வளவு பணக்காரனாயிருந்தாலும் ஆணும் பெண்ணும், இவர்கள் கட்டுபாடுப்படி, புலத்தில் உழைத்தே தீரவேண்டும். என்னதான் நெல்லும் நீரும் கொட்டிக்கிடப்பினும் கூழோ கம்பஞ்சாதமோ பரங்கிக்காய் சகிதம் சாப்பட்டே தீரவேண்டும், இவர்களுக்குமாடும் ஆடும் யதேஷ்டம். அவ்வளவிருந்தபோதிலும் ஒருவனாவது ஒரு முட்டைநெய் சாப்பிட்டறியான். நெய்யவ்வளவும் சேர்த்து நகரத்தில் விலைபண்ணி காசாய்க் குவிப்பார்கள். மோர் தயிர் ஒரு சொட்டுக் கூட வெளிவிடாமல் கம்பஞ் சோற்றிலும் கூழிலும் கலந்து புசித்துவிடுவார்கள். இவர்கள் வீட்டைப்போய்ப்பார்த்தால் கம்பு, கேழ்வரகு, உப்பு, மிளகாய், மோர், தயிர் இவைகளைத்தவிர வேறு போசனபதார்த்தங்கள் இருக்காது. இவர்கள் வீடு நன்றாய்க் கட்டப்பட்டு நாணற்புல்லால் வேயப்பட்டு விசாலமான அறைகள் உள்ளதாயிருக்கும். இப்படி வாஸத்துக்கு விசாலமான வீடு கட்டிக்கொண்டபோதிலும் அதை அவர்கள் தேகசௌக்கியத்துக்கு ஒன்றும்குறைவில்லாமலும் ஒரு காசுகூட வீண்செலவாகாமலும் கட்டிக்கொள்ளுவார்கள். இவர்களுக்கு வீடுகட்ட மரம் தம்படிகூட கொடுத்து வாங்கவேண்டியதில்லை. ஊருக்கடுத்த மர்க்கடத்தோப்பு என்ற ஒரு பெரும் அரணியத்தில் வேம்போ வேலோ இவர்களேபோய்வெட்டி வருவார்கள். மரத்தின் சுபாவம் எப்படியோ அப்படியே அதை அதிகமாய் செதுக்காமலும் சீவாமலும் வைத்து வீடு கட்டுவார்கள். கூரைவேய இவர்கள் நாணலை பணம் கொடுத்து வாங்கவேண்டியதில்லை. மரத்தைப் போலிதையும் மர்க்கடத் தோப்புக்கடுத்த **கருங்குளம்** என்ற ஏரிக்கரையில் அறுத்துவருவார்கள். இவர்கள் பாமரர்கள் என்றும் அதிகமாய் லாபமடைய சூதுவாது செய்யமாட்டார்கள் என்றும் ஆங்கிலேயர் நம்பி இவர்களுடைய உபயோகத்துக்குவேண்டியமட்டும், மரமோ, நாணலோ வெட்டிக்கொள்ளும்படியும், அறுத்துக்கொள்ளும்படியும் உத்தரவு செய்திருக்கின்றா

ர்கள். அவ்விதமாய் ராஜாங்கத்தார் இவர்களிடம் வைத்த நம்பிக்கையை இதுவரையில் ஒருவனாவது துரோகம் செய்தவனல்ல. ஒரு பிராணியாவது தனக்கு வேண்டியதற்குமேல் ஒரு துரும்புகூட எடுத்தவனல்ல.

இவர்கள் வியவசாய சாஸ்திரம் படிக்காமலே மேன்மையான வேளாண்மைத் தொழில் செய்கின்றவர்கள் என்று முன்னமேயே சொன்னோம்.

**உடையான் பயிரிடுதல்.** அது எப்படி என்றால், உடையான் ஒவ்வொருவனுக்கும் 10-மாடுஅல்லது 100-ஆடு எப்பொழுதுமுண்டு. புற்புலம் என்னும் கிராமத்தில் புல் நிறைந்த பொட்டல்கள் வெகு அதிகம். மாடுகளையும் ஆடுகளையும் பகற்காலம் முழுதும் வயது சென்ற ஓர் கிழவியோ அல்லது 10 - 12 - வயதுள்ள ஒரு சிறு பையனோவெளியில் ஓட்டிக்கொண்டுபோய் சாயங்காலம் வரையில் மேய்த்துவருவான். இராக்காலங்களில் தரிசாய் கிடக்கும் ஒரு புலத்தில்தான் அவர்கள் மாடுகளைக் கட்டுவார்கள்; ஆடுகளை அடைப்பார்கள்.புற்புலத்தில் நஞ்சைகள் ஒருபோகந்தான்விளையுமாகையால் அந்த ஊரில் எப்பொழுதும்பாதிநிலங்கள்தரிசாய்க்கிடக்கும். விளைவது ஒரு போகம் என்றாலும் மற்ற ஊர் நஞ்சை நிலங்களின் முப்போகத்தின்சாகுபடி கைகூடும். அது எப்படி என்றால் உடையான்களுடைய உழைப்பாகிற மந்திரமே ஒழிய வேறல்ல. அது என்ன மாயமோ என்ன மந்திரமோ ஏகருக்கு 100-கலம் மற்ற இடங்களில் கண்டு முதலானால் புற்புலத்தில் உடையானுக்கு ஏகருக்கு 400 கலம் கண்டு முதல் ஆகும். அதே நிலத்தை ஒரு பிராமணனுக்கு உடையான் விற்பானேயானால் அப்புற்புலத்தில் அவனுக்கு அது 80-கலந்தான் காணும். இது என்ன மாயம்? நாம் அடியில் சொல்லும் காரணத்தைக் கவனித்தால் அது இதைப்படிக் கிறவர்களுக்கு வெளியாகும்.

மாட்டையோ ஆட்டையோ வெளியில் ஓட்டிக்கொண்டு மேய்க்கப் போகும்போது மாட்டுக்காரன் ஒரு பெரிய சாட்டுக்கூடை எடுத்துப் போவான். மாட்டில் விழும் சாணி ஒன்றுகூட வீண்போகாமல் அவ்வளவையும் சேகரித்து சாயங்காலம் தரிசாய்க் கிடக்கும் புலத்தில் கொண்டு வந்து ஒரு மூலையில் கொட்டுவான். இராத்திரி காலத்தில் மாடுகள் புலத்திலடைபடுகிறபடியால் அப்போது விழுகிற சாணியும் சலமும் புலத்திலேயே மடியும். இம்மாதிரி ஒரு பைசாகூட செலவில்லாமல் இவைகளெல்லாம் ஒரு முதற்தரமான எருவாய்ஒருபுலத்துக்கு ஆய்விடும். சாகுபடிகாலத்தில்மாட்டெருவைநன்றாய் இழுத்துவிட்டு உழுது நிலத்தை நேர்த்திசெய்வான். இதற்கு அவனுக்கு ஒரு வேற்றாளுடைய சகாயமும்வேண்டாம். அவனுக்கு உதவி அவன் வீட்டுப்பெண்டுகளும் பிள்ளைகளுமேயாம். இவர்களோநாற்று

நடுவார்கள்; வரப்புவெட்டுவார்கள்; பொட்டல்களிலிருக்கும் தழையையோ குழையையோ வெட்டிவந்து வயலில் போட்டு மிதிப்பார்கள். இம்மாதிரி ஒருகாசு செலவில்லாமல் எருபோடுவதும், சாகுபடி செய்வதும் இவர்கள் தொழிலாகையால் ஏன் இவர்களுக்கு கண்டு முதலதிகமாகாது? ஒழிந்த வேளையில் இவர்கள் வீட்டுப்பெண்டுகள் அந்தந்த காலங்களில் அவர்கள் ஆட்டின்மேல் மயிர் எடுத்து முரட்டு கம்பளங்கள் நெய்வார்கள். உடையான்களுக்கு புஞ்சை நிலங்களில் பருத்திப் பயிராவதால் இராக்காலங்களில் பருத்தியை இராட்டினத்தில் கொட்டை யெடுத்து பன்னி நூல் திரித்து துப்பட்டிநெய்வார்கள், சுருக்கிச்சொல்ல உடையான் ஒருகாசு செலவிட்டு ஒருவனிடம் ஒரு பொருள்வாங்குவதில்லை. தட்டி முட்டி ஒரு கம்பளம் அல்லது துப்பட்டி வேறிடமிருந்து வாங்கிவிட்டால் அது அவன் வீட்டுப் பெண்டுகள சோம்பேறிகள் என்று அவர்களுக்கு அவமதிப்பு வந்துவிடும். அந்த அவமானத்தை, உடையார் ஜாதி மடந்தைகள் சகிக்கார்கள். இப்படி வாஸஸ்தலம், ஆகாரம், உடுப்பு, வாழ்வு, சாவு, முதலியவைகளில் வெகு சுலபமாய் செலவிட்டு, ஆட்டையும் மாட்டையும் வைத்துக்கொண்டு நெய்விற்று, பால்விற்று, ஒரு காசுகூட செலவில்லாமல் வியவசாயஞ்செய்து, பிழைக்கும் உடையார்களுக்கு பணத்துக்குக் குறைச்சலா? வெகு பாமார்கள் இவர்கள் என்று சொன்னோமே; இவர்கள் தங்கள் ஜாதி விஷயமாய், அல்லது மதவிஷயமாய், ஆண்களாவது, பெண்களாவது ஒரு சமயத்தில் சச்சரவு செய்துகொண்டால் அதைத்தீர்த்துக்கொள்ள அவர்களுக்கு புத்திமட்டு ஆகையால் அந்த ஊரில் ஒரு ஐயரிடம் போய் "சாமி! நீ தான் எங்களுக்குத் தெய்வம்" என்று சொல்லி அவர்முன் நிற்பார்கள். அவர்கள் சண்டையை விசாரித்து ஐயர் என்ன சொல்லுவாரோ அதையேபிரமாணமாய்க் கொண்டு உடனே ஒன்று கூடுவார்கள். விவகாரத்துக்குவெகு பயந்தவர்கள். உடையாப்பிள்ளை ஒருவனாவது **கோர்ட்டு** என்பதைக்கண்டேயிருக்கமாட்டான். பாவத்துக்கு எப்பொழுதும் அஞ்சிநடக்கப்பட்டவர்கள். அவர்களுக்குதுக்கம்என்பதேதெரியாது. எப்போதும்சிறிப்புமுகமாகவேயிருப்பார்கள். இக்காலத்துநாகரீகம் என்பது ஒருவனுக்காவது தெரியாது. கடியாரத்தைக்கண்டால்அது என்னமோசூத்திரம். கைவைத்தால்கடிக்கும் என்று நடுங்குவார்கள். ரெயிலைக்கண்டால் அது அக்கினிதேவன் என்று நமஸ்காரம் பண்ணுவார்கள். வெள்ளைக்காரனுக்கு செத்தபிணத்தைக்கூட உயிர் மூட்டத்தக்ககுணம் உண்டு என்று அவனிடம் வெகு பக்தி. அதுபோல் தெய்வத்தினிடத்திலும், பிராமணனிடத்திலும், தர்மத்தினிடத்திலும் மூடபக்தி அவர்களுக்கு அதிகமாயுண்டு. சில உடையான்கள் சத்திரஞ்

சாலைகட்டி அதில் ஜனங்களுக்கு சாப்பாடுபோட பொருளுதவி செய்துவருகிறார்கள். அமாவாசை, திதி, இந்த நாள்களில் பாப்பானுக்கு இரண்டொரு ரூபாவுக்குக் குறையாமல் அரிசி, காய், கறி, நெய், பால், தயிர் கொடுப்பார்கள். ஒவ்வொருவிதத்திலும் உடையான்வாழ்வு வெகு சிலாக்கியம் அவன் அபேக்ஷிக்கும் பொருளகள் வெகுக்குறைவு. உண்மை என்பது அவனிடங் குடிகொண்டிருக்கும். உடையார்ப்பெண்கள் நாள் முழுவதும் காடுகளிலும் வயல்களிலும் திரிவதே. உடன் பிறப்பாயிருந்த போதிலும் எல்லாரும் வெகு பரிசுத்தமுள்ளவர்கள். இவ்வளவுக்கும் காரணம் அவர்கள் சுறுசுறுப்பே. ஒரு நிமிஷமாவது ஒரு உடையாப்பிள்ளை வீண்காலம் போக்காதுமாடோட்டுவதோ, பருத்தி பறிப்பதோ, சாணி பொறுக்குவதோ, தழை வெட்டுவதோ, உழுவதோ, நடுவதோ, நெல் விற்பதோ, நூல் நூற்பதோ எதாவது ஒரு தொழில் செய்துகொண்டேயிருக்கும். அஸ்தமனமாய் 4 - 5 - நாழிகைக்கெல்லாம் ஒவ்வொருவன் செய்ய வேண்டிய தொழில்கள் செய்து முடித்தவுடன் எல்லாரும் தெருவில் விசுப்பலகையிலோ அல்லது தெருத்திண்ணையிலோ உட்கார்ந்துகொண்டு அவர்கள் புத்திக்கேற்றபடி கதைகள் சொல்லிக்கொண்டு உல்லாஸமாய் காலத்தைக் கழிப்பார்கள். இம்மாதிரி இவர்கள் இருக்கிற ஊர் புற்புலம் என்று முன்னமே சொன்னோமே இவ்வளவு தூரம் இவர்களைச்சொல்லிவிட்டு புற்புலத்தை சற்று வருணிப்போம். நாம் சொல்லுவதற்கு முன்னமேயே இது இம்மாதிரி கிராமம் என்று நாம் உடையார்களை வருணித்ததனாலேயே இதைப்படிப்பவர்கள் ஊகித்திருக்கலாம். இது பழைய அரசர்களால் ஒரு பிராமண பிரபுவுக்கு மாடு மேய்க்கவிட்ட கிராமம் புல் அதிகமாய் அங்கு உற்பத்தியாகையால் அந்த கிராமத்துக்கே புற்புலம் என்று பெயர் வந்துவிட்டது. அக்காலத்தில் அந்த பிராமணப்பிரபு அந்த கிராமத்தை வாங்கிக்கொண்டு அதில் தனது மாடுகளை மேய்ப்பதற்கும் காடுகளைச்சீர்திருத்தி நஞ்சைகளை வயலாகப் பண்ணுவதற்குமாக அநேக உடையான்களுடன் அங்கு குடியேறினர். இது நமது கதை துடங்கும் 200 வருஷகாலங்களுக்கு முன்பு. அப்புறம் அந்த ஊரில் பிராமணக் குடிகள் விசேஷமாக இல்லாமல் உடையான்கள் பிரபலமாய்விட்டது.

**மாதர்மித்திரன்.**

# NEWS & NOTES.

பஞ்சாபிலிருந்து மூன்று பெர்ஷியன் ஜமக்காளங்களும், இரண்டு பெரிய திரைகளும், சில மரவேலைகளும் பாரிஸ் பொருட்காட்சிக்கு, அனுப்பப்பட்டிருக்கின்றன.

---

அமெரிக்காவில் நியூயார்க்கென்ற பட்டணத்தில் முப்பத்துநாலு அடுக்கு மெத்தைகட்டப்பட்டிருக்கிறதாம்: இதன் உயரம் 424 அடி; அதாவது சென்னையிலுள்ள தீபஸ்தம்பத்தைப் பார்க்கிலும் மூன்று மடங்கு உயரமானதாக விருக்கும்.

---

லாகூரில் சில மகமதிய மாதர்கள் சேர்ந்து "டாசிப் இனிஸ்வான்" என்ற வாரப்பத்திரிகையை உர்டுப்பாஷையில் பிரசுரித்து வருவதைக்கேட்க சந்தோஷப்படுகிறோம். மகமதிய மாதர்கள் படித்துத்தேர்ந்து இவ்விதம் தங்கள் சகோதரிகளுக்கு நன்மை செய்ய முன்வந்தது மெச்சத்தகுந்ததே.

---

அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியாவில் ஒரு தராசிருக்கிறது. அதினிருபுறங்களிலும் ஒரே கனமுள்ள காகிதங்களை வைத்தால் தராசினிருபுறமும் சரியாய் நிற்கும். ஒருபுறக்கடிதத்தின் மேல் ஒரு பென்சிலினால் எழுதினால் உடனே அப்புறம் தாழ்ந்துவிடும். அத்தராசைப்பண்ணினவன் மிகசமர்த்தனென்று சொல்லவும் வேண்டுமா?

---

மைசூர்மகாராணி பெண்பாடசாலையில் எப், ஏ. (F.A.) பரீட்சைக்குப்போகும் வகுப்புவைக்க திவானவர்கள் ஏற்பாடு செய்திருப்பது மிக மெச்சத்தகுந்ததே. இந்த வகுப்பு கோடை விடுமுறைநாள் கழிந்தபின் ஏற்பட்டு பாடங்களும் சரியாய் நடத்தப்படும். மைசூர் இராஜாங்கத்தார் பெண்கல்வி விஷயத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்துக்கொள்வதைப்போல ஜனங்களும் பெண் கல்வி விஷயத்தில் அக்கரை எடுத்துக் கொண்டால் தான் அவர்கள் எண்ணம் முடிவுக்குவரும்.

---

லண்டன் நகரத்தில் ஏலம்போடும்படியான ஒரு ஷாப்பில் மடகாஸ்கரிலுள்ள ஐபியோர்நிஸ்மேக்ஸிமஸ் என்ற மிகப்பெரிய பக்ஷி இட்ட ஒரு முட்டை ஏலம் போடப்பட்டபொழுது இது £44-2s. க்கு ஏலம் எடுக்கப்பட்டதாம். அதாவது ரூ 661-8அணா. இதன் சுற்றளவு ஒரு கஜம், நீளம் ஒரு அடி, இது 150 பெட்டைக்கோழியின் முட்டைகளுக்கு சரியாகவிருக்குமாம். இது ஒரு வேடிக்கையாக விருப்பதால் இவ்வளவு ஜாஸ்தி ரூபாய் கொடுத்தார்போலும்.

---

மாக்ஷிமை தங்கிய நமது சக்கிரவர்த்தினியாருக்கு முன்னிருந்த இங்கிலாந்து தேசத்தரசர்கள் எல்லோருடைய ஆளுகையிலும் சேர்ந்து 2050 லக்ஷம்பவுன் பெறுமான நாணயங்கள் நாணயசாலையில் முத்திரிக்கப்பட்டன: நமது சக்கிரவர்த்தினியார் சிம்மாசனத்தை யலங்கரித்தது முதல் நாளது வரையில் இந்தியாவில் அச்சிட்ட 1580 லக்ஷம் பவுன் பெறுமான நாணயங்களுள்பட 4500 லக்ஷம் பவுன் விலையுள்ள நாணயங்கள் போடப்பட்டிருக்கின்றன. இதனால் நமது மகாராணியாருடைய ஆளுகையில் ஆங்கிலேய ராஜ்யம் எவ்வளவு விருத்தியடைந்திருக்கிறதென்று நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம்.

---

ஒரு ரயில் வண்டியின் ஊதல் இரண்டாயிரத்து எண்ணூறு கஜதூரம் கேட்கும்; நாய் குலைத்தால் 1800 கஜம்கேட்கும், மேளமடித்தால் 1600 கஜம் கேட்கும்; மனிதன் பேசினால் 1000 கெஜம் கேட்கும்; தவளைசத்தினால் 900 கஜமும், சிள்வண்டின் தொனி 800 கஜமும். கேட்கும்; 600 கஜங்களில் தான் ஒருவன் பேசினால்

கன்றாகக்கேட்கும். ஒருவன் மலையின்மேல் நின்றுபேசினால் அவன் பின்னால் நூறு கஜங்களுக்குள் நிற்பவனுக்குத்தான் கேட்கும். புகைக்கூண்டில் ஆகாயமார்க்கமாகச் செல்லுபவன் பூமியில் ஒரு நாய் குலைப்பதை 4 மையிலுக்கப்பால் கேட்கக்கூடும். இவைகளையெல்லாம் கண்டுபிடித்தவர் மிகபுத்தியுள்ளவரென்றும் அதிக பொறுமையும் விடா முயற்சியுமுள்ளவரென்றும் சொல்லவேண்டும்.

---

சார்வரி வருஷத்திய ரிப்பன் பாக்கட் பஞ்சாங்கம்: இது திருவையாறு ஜோதிஸ்தந்திரவல்லபைப்ரம்மஸ்ரீ சுந்தரேசுவரசிரௌதிகள் அவர்கள் சிஷ்யரும், ஸ்ரீமத் தி. சிதம்பரநாதஜோதிஷர்அவர்கள் மருகருமாகியப்ரம்மஸ்ரீ ஜோ. கார்த்திகேய ஐயரவர்களால் கணிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இதில் இங்கிலீஷ் டைரிகளைப்போல பற்பல உபயோகமான சமாசாரங்களும், தினக்குறிப்புகள் எழுததேதியுடன் பக்கங்களும், வரவுசெலவு கணக்குக்குப்பிரத்தியேகமாய் சில கடுதாசிகளுமுள. மேலும் இது நேர்த்தியாய் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 6. தபால் பாக்கிங் சார்ஜு உள்பட அணா 7. வேண்டியவர்கள் சென்னை 273-வீடு, தம்பு செட்டிவீதி, மதராஸ் ரிப்பன் பிரஸ் சொந்தக்காரர் ம-ா-ா-ஸ்ரீ சை. இரத்தினசெட்டியாரவர்களுக்கு எழுதிக்கொள்ளலாம்.

---

யுத்த சமயங்களில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சமாசாரமனுப்புவதற்காகப் புருக்களை வளர்க்கிறது வழக்கம். கடிதத்தைப் புருவின் கழுத்தில் கட்டிவிட்டால் அது குறிப்பிட்ட இடத்திற்கு வெகு சீக்கிரத்தில் பறந்துபோய் அங்கே அந்தக்கடிதத்தைக் கொண்டுபோய் கொடுத்துவிடும். கண்ணுக்கெட்டாத உயரத்தில் இந்தப் புருக்கள் பறக்குமாதலால் இவற்றை எதிரிகள் மார்க்கத்தில் சுட்டு விடுவார்களென்கிற பயமுமில்லை. ஜர்மனி, பிரான்ஸ், ருஷியா, ஆஸ்ட்ரியா, இட்டலி, ஸ்பெயின் இந்தத் தேசத்துத் துரைத்தனத்தார்கள் ஏராளமான தொகைகளை இந்தப்பக்ஷிகள் விஷயமாய்ச் செலவுசெய்கிறார்கள். ஜர்மனி தேசத்தில் சமாசாரங்கொண்டுபோகக்கூடிய இரண்டு லக்ஷம் பறவைகளிருக்கின்றன. பிரான்சில் இன்னம் அதிகமான பறவைகளிருக்கின்றன. இவ்விதம் இந்தியாவில் முற்காலத்திலிருந்ததாகக்கேள்வி.

---

சில மாதங்களுக்குமுன் சென்னையில் விஜயம்செய்திருந்தபண்டிதை அசலாம்பிகை அம்மாளை நாம் போய் பார்த்தோம். அப்பொழுது அம்மாது இங்குவந்த காரணத்தைக்கேட்டோம்; அதற்கு கண்வைத்தியத்திற்காக என பதிலுரைத்தார். அவர் பரிசீலனம் செய்த நூல்களெவை என்று கேட்டதற்கு காந்தம், சீகாளத்திபுராணம், காஞ்சிபுராணம், பிரபுலிங்கலீலை, முதலியவைகளைப் பாடங்கேட்டதாகவும் தாமே கம்பராமாயணம், சிவப்பிரகாச சுவாமிசெய்தநூல்கள் குமரகுருபரசுவாமிகள் செய்தநூல்களையும் பார்த்திருக்கிறதாகச் சொன்னார். இவர் திருவாமாத்தூர்திரிபந்தாதி, திருவிடைமருதூர் ஸ்தலபுராணம் முதற்காண்டம் இவைகளைப் பிரசுரித்திருக்கிறார். நமது பெண்களுக்காக பிரசங்கம் செய்ததுண்டாவென்றதற்கு இவர் தமது ஊரிலுள்ள சகோதரிகளுக்கு கல்விபுகட்ட முயற்சிசெய்தபொழுது அவர்கள் படிப்பில் விருப்பமிருப்பதாக காட்டவில்லையாம். வயது சென்றவர்களைவிட சிறுபெண்களைக் கற்பிக்கமுயல்வது சுலபமெனஅபிப்பிராயப்பட்டார். மேலும் பெண்களுக்கு தையல்வேலை கற்பிக்கவேண்டியதவசியமென்றும், பெண்கள் ஆங்கிலம் கற்பதும் நலமென்றும் அபிப்பிராயப்பட்டார். ஆனால் எப்பாஷையையும் அரைகுறையாய் கற்பது உசிதமல்லவென்றார். நமது பத்திரிகையைப்பற்றி கேட்டதற்கு இது போன்ற தமிழ்ப்பத்திரிகை இது வரையிலும் இல்லாது இப்போது மாதர்களுக்காக உதித்திருக்கின்றமையால் இது சிறு பெண்களுக்கும், மாதர்களுக்கும்இன்றியமையாததாயிருக்கிறதென்றும் சொன்னார். பின்பு இவருக்கு நாம் வந்தனமளித்தபின் விடை பெற்றுக்கொண்டு வீடுசென்றோம்.

---